ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் சபைச் செயலகம்
திகதி 2023.11.17

# இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபையின் உள்ளமைப்பு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை, இலங்கை மத்திய வங்கியின் அலுவல்களின் நிருவாகத்தினையும் முகாமைத்துவத்தினையும் மேற்பார்வை செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கியின் பொதுவான கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கும் பொறுப்பான சபையாக நிறுவப்பட்டிருக்கிறது. சட்டத்தின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் முன்னைய நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையின் உறுப்பினர்களாகத் தொடர்ந்துமிருப்பர்.

இதற்கமைய, நாணயச் சபையின் உறுப்பினர்களாக முறையே 2021.06.29 இலிருந்தும் 2022.07.27 இலிருந்தும் நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயச் சபைக்கு நியமிக்கப்பட்ட திரு. சன்ஜீவ ஜயவர்த்தன சட்டத்தரணி மற்றும் திரு. ஏ. என். பொன்சேகா ஆகியோர் ஆளுகைச் சபையின் உறுப்பினர்களாகத் தொடர்ந்துமிருப்பர். எவ்வாறெனினும், 2020.07.29 இலிருந்து நாணயச் சபையின் உறுப்பினராக இருந்த முனைவர். ராணி ஜயமகா 2023.09.12 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அவரது இராஜினாமாக் கடிதத்தினைச் சமர்ப்பித்திருந்தமையினால் அவர் நாணயச் சபை உறுப்பினராக இல்லை. ஆளுகைச் சபையின் உறுப்பினராக தொடர்ந்துமிருந்து வந்த நியமன உறுப்பினரான திரு. சன்ஜீவ ஜயவர்த்தன சட்டத்தரணி 2023.11.05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அவரது இராஜினாமாக் கடிதத்தினைச் சமர்ப்பித்திருந்தார். இதற்கமைய, பொருளாதார நெருக்கடியில் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்குத் தொடர்பில், 2023.11.14 அன்று உச்ச நீதிமன்றம் அதன் இறுதித் தீர்ப்பை மேற்கொள்வதற்கு முன்னர் முனைவர் ஜெயமகா மற்றும் திரு. ஜயவர்த்தன ஆகிய இருவரும் தமது இராஜினாமாக்களைச் சமர்ப்பித்தனர்.

***ஆளுகைச் சபை***

இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுகைச் சபை இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையின் தலைவரும் ஆளுநருமான முனைவர் பி. நந்தலால் வீரசிங்க, திரு. ஏ. என் பொன்சேகா புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களான முனைவர். ரவி ரத்னாயக்க (2023.09.21இல் நியமிக்கப்பட்டவர்) திரு. அனுஷ்க எஸ். விஜேசிங்க (2023.09.21இல் நியமிக்கப்பட்டவர்) திரு. விஷ் கோவிந்தசாமி (2023.10.26இல் நியமிக்கப்பட்டவர்) ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது.

புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் வருமாறு:

**முனைவர். ரவி ரத்னாயக்க**



முனைவர். ரவி ரத்னாயக்க ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் முதன்மை பொருளியலாளராகவும் ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் முன்னாள் பணிப்பாளராகவும் இருந்தவர். ஐக்கிய நாடுகளில் முனைவர் ரத்னாயக்க வர்த்தகம் தொடர்பான ஆசிய பசுபிக் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி வலையமைப்பு, காகிதங்களற்ற வர்த்தக நிபுணத்துவம் தொடர்பான நிபுணத்துவத்தின் ஆசிய பசுபிக் வலையமைப்பு ஆசிய – பசுபிக் வர்த்தகம் மற்றும் உடன்படிக்கைக்கு புத்துயிரளிப்பதற்காக உறுப்பு நாடுகளுக்கு உதவியளித்தமை உள்ளிட்ட அநேக பிராந்திய ஒத்துழைப்பு பொறிமுறைகளை முன்னெடுத்திருக்கின்றார். அவர் பரந்தளவிற்கு நன்கறியப்பட்ட அநேக வெளியீடுகளையும் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள், கம்பனி சமூகப் பொறுப்பாண்மை, நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி, வர்த்தகம், முதலீடு மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மீதான அநேக செயற்றிட்டங்களையும் இணைத்து மேற்பார்வை செய்திருக்கிறார். முனைவர் ரத்னாயக்க உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள், பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் மற்றும் உணவு வேளாண்மை அமைப்பு என்பனவற்றிற்கான ஆலோசனையாளராகவும் இருந்திருக்கின்றார். மேலும், அவர் 2016 இலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வருகின்ற அநேக நாடுகளுக்கு மதியுரையாளராகவும் இருந்து வருகின்றார். இடைவெளிகளை நிரப்புகின்ற நிறுவகத்தின் செயலாளர் நாயகம் என்ற ரீதியில் அவர் கல்வி, பசுமை அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் துறைகளில் ஒத்துழைப்பு சமூகப் பொறுப்பாண்மைச் செயற்றிட்டங்கள் பலவற்றை அபிவிருத்தி செய்திருக்கின்றார்.

ஐக்கிய நாடுகளில் இணைவதற்கு முன்னர், 1980களின் தொடக்கப்பகுதியில் அவர் இலங்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் இணைந்திருந்ததுடன் தீர்வை மற்றும் வர்த்தகம் மீதான சனாதிபதி ஆணைக்குழுவிற்கான ஆராய்ச்சிப் பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கின்றார். அவர் 1991இலிருந்து 1999 வரையான காலப்பகுதியில் நியூசிலாந்தின் ஒக்லாந்து பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் மூத்த விரிவுரையாளராக இருந்திருக்கின்றார். அவர் அபிவிருத்தி மற்றும் பன்னாட்டு பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட ஆராய்ச்சி மற்றும் கற்பித்தலில் நடைமுறை மற்றும் கல்வியியல் ஆகிய இரண்டு துறைகளிலும் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்ட பொருளியலாளராக விளங்குவதுடன் உசாத்துணையாக விளங்கக்கூடிய அநேக கட்டுரைகள், நூல்கள், செயற்றிட்ட விளக்கக் கட்டுரைகள் என்பனவற்றை பிரசுரித்திருப்பதுடன் பெரும் எண்ணிக்கையிலான வெளியீடுகளின் தயாரிப்புக்களையும் மேற்பார்வை செய்திருக்கின்றார்.

**திரு. அனுஷ்க எஸ். விஜேசிங்க**



திரு. அனுஷ்க எஸ். விஜேசிங்க அரசாங்கம், தனியார் துறை ஆய்வு நிறுவனங்களில் அனுபவம் நிரம்பிய பொருளியலாளராவர். அவர் அரச கொள்கை நிறுவகத்தினதும் திறன் எதிர்காலத்திற்கான மையத்தினதும் இணை நிறுவுனராக/ பணிப்பாளராக இருக்கின்றார். திரு. விஜேசிங்க மொங்கோலியா, பாகிஸ்தான், மியன்மார், மாலைதீவுகள் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிலுள்ள ஆலோசனைச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டு ஆலோசனையாளராகவும் இருக்கின்றார். இந்நியமனம் வரை திரு. விஜேசிங்க செலான் வங்கி பிஎல்சி மற்றும் அட்டன் நஷனல் வங்கி பினான்ஸ் பிஎல்சி என்பனவற்றில் மூத்த சுயாதீனமான நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளராக இருந்திருக்கின்றார். அவர் பெயர்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் மற்றும் குட் லைவ் X

(பிறைவேற்) லிமிடெட் சபையில் தொடர்ந்தும் இருந்துவருவதுடன் திரு. விஜேசிங்க தேசிய புத்தாக்க முகவர் சபை மற்றும் சனாதிபதி செயலகத்திலுள்ள ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஏற்றுமதி மீதான மேற்பார்வைக் குழு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பனவற்றிலும் பணியாற்றியிருக்கின்றார். அவரது முன்னைய வகிபாகங்களைப் பொறுத்தவரை, அவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முதன்மைப் பொருளியலாளராகவும் இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பொருளியலாளராகவும் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சின் மதியுரையாளராகவும் இருந்திருக்கின்றார். திரு. விஜேசிங்க உலக பொருளாதார மன்றத்தின் புத்தாக்க அமைப்பு முறைமையின் மீதான உலகளாவிய எதிர்காலச் சபையின் உறுப்பினராகவும் சியோல் நகரிலுள்ள கொரிய அபிவிருத்தி நிறுவகத்திலுள்ள ஆசிய அபிவிருத்தி நிறுவகத்தின் உறுப்பினராகவும் இருந்திருக்கின்றார். திரு. விஜேசிங்க லீட்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளாதாரத்தில் முதுமானிப்பட்டத்தினையும் இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியிலிருந்து பொருளாதாரத்தில் இளமானிப் பட்டத்தினையும் பெற்றிருப்பதுடன் ஹாவார்ட் கென்னடி ஸ்கூலின் ''முன்னணி பொருளாதார வளர்ச்சி'' நிறைவேற்று நிகழ்ச்சித்திட்டத்தின் பழைய மாணவருமாவார்.

**திரு விஷ் கோவிந்தசாமி**



திரு விஷ் கோவிந்தசாமி வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் ஐக்கிய அமெரிக்காவின் ஹார்ட்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரனியல் பொறியியலில் விஞ்ஞான இளமானிப் பட்டத்தினையும் பெற்றிருக்கின்றார். 26 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமைப் பதவியிலிருக்கும் திரு. கோவிந்தசாமி பன்முகப்படுத்தப்பட்ட பல்லினப் பெருநிறுவனமான சன்சயின் ஹோல்டிங் பிஎல்சியின் குழும முகாமைத்துவப் பணிப்பாளராக இருந்து வருகின்றார். இந்நிறுவனம் இலங்கையின் பட்டியலிடப்பட்ட முதல் 50 நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அவர் இலங்கையின் சான்றழிக்கப்பட்ட தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதுடன் உடனடியாக முற்போந்த இலங்கை வர்த்தக சம்மேளனத்தினதும் இலங்கை தொழில்தருநர் சம்மேளனத்தினதும் தலைவருமாவார்.

சன்சைன் ஹோல்டிங்ஸ்சின் தற்போதைய பதவிக்கு முன்னர் திரு. கோவிந்தசாமி இந்தியாவின் டாட்டா நிறுவனத்துடன் பங்குடமையினைக் கொண்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட முகாமைத்துவக் கம்பனியான வட்டவல பிளான்டேசனின் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்திருக்கின்றார். வட்டவளையில், அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டக் கம்பனியொன்றினை தனியார் மயப்படுத்திய பின்னர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படும் விதத்தில் உயர்ந்த மூலதன மயப்படுத்தப்பட்ட பிராந்திய பெருந்தோட்டக் கம்பனியாக வெற்றிகரமாக மாற்றியமைத்ததில் அவர் ஆற்றிய செயற்றிறன்மிக்க வகிபாகம் அவருக்கு பெருமளவு நன்மதிப்பினைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது. இன்றைய நாளில் இலங்கையின் முன்னணி தேயிலை வர்த்தக நாமங்களாக விளங்கும் செஸ்ரா, வட்டவளை மற்றும் ரண்ஹுட்ட ஆகிய வர்த்தக நாமங்களை உருவாக்கிய பெருமையும் அவரையே சேரும். இந்தியாவின் ஹவுஸ் ஒவ் டாட்டா நிறுவனம் இலங்கையிலுள்ள அவர்களது அநேக கம்பனிகளின் சபைகளில் திரு. கோவிந்தசாமியை நியமித்திருக்கிறது.

***நாணயக் கொள்கைச் சபை***

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையொன்று இருத்தல் வேண்டுமென்பதுடன் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு அதனைப் பேணுவதன் பொருட்டும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த இலக்கிடல் கட்டமைப்பொன்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை வடிவமைப்பதற்கும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீத அமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்குமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, அதிமேதகு சனாதிபதி, அரசியல் யாப்புச் சபையின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் 15ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க 2023.09.21 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சபையின் உறுப்பினர்களாக முனைவர் (செல்வி) துஷ்னி வீரகோன் மற்றும் முனைவர் பிரியங்க துனுசிங்க ஆகியோரை நியமித்திருக்கின்றார்.

உயர் தேர்ச்சிபெற்ற தொழில்சார் நிபுணர்களாக விளங்கும் மேலே குறிப்பிட்ட இரண்டு உறுப்பினர்களும் ஆளும் சபையின் உறுப்பினர்களுடனும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பாக இருக்கும் துணை ஆளுநர்களுடன் இணைந்து நாணயக் கொள்கைச் சபையில் பணியாற்றுவர்.

இரண்டு உயர் தேர்ச்சிபெற்ற தொழில்சார் நிபுணர்களின் விபரக்குறிப்பு வருமாறு:

**முனைவர் (செல்வி) துஷ்னி வீரகோன்**



முனைவர் (செல்வி) துஷ்னி வீரகோன் இலங்கை கொள்கை ஆய்வுகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் அதன் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சியின் தலைவருமாவார். முனைவர் பட்டத்தினை நிறைவு செய்ததும் 1994இல் இலங்கை கொள்கை ஆய்வுகள் நிறுவகத்தில் இணைந்து கொண்ட இவர் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை, பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்பு மற்றும் பன்னாட்டு பொருளாதாரம் தொடர்பில் அவர் எழுதிய பரந்த வெளியீடுகளுக்குச் சொந்தக்காரராவார். இவர் தற்பொழுது தென்னாசிய பொருளாதாரம் மற்றும் கொள்கை ஆய்வுகளின் (ஸ்பிறிங்கர்) தொடர்களது ஆசிரியராகவும் தென்னாசிய பொருளாதார சஞ்சிகையின் முதன்மை ஆசிரியராகவும் தென்னாசிய அபிவிருத்தி சஞ்சிகை, பன்னாட்டு அபிவிருத்தி சஞ்சிகை என்பனவற்றின் ஆசிரியர் குழாமிலும் பணியாற்றிவருவதுடன் இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகத்தின் வருடாந்த முதன்மை அறிக்கையான ''இலங்கை: பொருளாதார நிலை'' இன் ஆசிரியராகவும் இருந்து வருகின்றார்.

பொருளாதார உறுதித்தன்மை மீதான வளர்ச்சியின் மீட்சி மற்றும் ஊக்குவிப்பு என்பனவற்றின் மீதான குழு உறுப்பினர் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் உட்பட, இலங்கை அரசாங்கத்தின் கொள்கை அபிவிருத்திக் குழுக்களில் பணியாற்றிய பரந்தளவிலான அறிவினை தன்னகத்தே கொண்டிருக்கும் இவர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் நியமன உறுப்பினராக (2019 – 2020) முன்னரும் பணியாற்றியிருக்கின்றார். இவர் நேஷன் ட்றஸ்ட் வங்கியினதும் (2007 – 2016), கார்கிள்ஸ் வங்கியனதும் (2018 – 2019) சுயாதீனமான நிறைவேற்று அல்லா பணிப்பாளர், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகக் கொள்கை பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நிலையம் உள்ளிட்ட கல்வியியல் நிறுவனங்களில் பணிப்பாளராகவும் அவுஸ்திரேலியா, மொனாஷ் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி பொருளாதாரம் மற்றும் உறுதித்தன்மைக்கான நிலையத்தின் மதியுரைச் சபையில் பல்வேறு பதவிகளை வகித்திருக்கின்றார். அவர் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புக்களில் ஆலோசனையாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

முனைவர் வீரகோன் ஐக்கிய இராச்சியத்தின் குயின்ஸ் பெல்பாஸ்ட் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளாதாரத்தில் சிறப்பு இளமானி விஞ்ஞானப் பட்டத்தினை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றுக்கொண்டதுடன் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தினையும் முனைவர் பட்டத்தினையும் ஐக்கிய இராச்சியத்தின் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து கலைப்பீட புலமைப்பரிசிலையும் பெல்பாஸ்ட் குயின்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து மெக்கேன் பதக்கத்தினையும் புலமைப்பரிசிலையும் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசிலையும் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்திடமிருந்து கடல்கடந்த ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசிலையும் மற்றும்

மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து டிறம்மன்ட் பிரேசேர் ஆராய்ச்சி மாணவருக்கான சுங்கத்தினையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

**முனைவர் பிரியங்க துணுசிங்க**



முனைவர் பிரியங்க துணுசிங்க பொருளாதாரத் திணைக்களத்தின் பொருளாதார பேராசிரியரும் கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தலைவருமாவார். இவர் அறிவித்தல், ஆராய்ச்சி, பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கலில் ஏறத்தாழ 20 ஆண்டுகால அனுபவத்தினைக் கொண்டவர். அவரின் கற்பித்தல் துறைகளாக பொருளியலளவை, புள்ளிவிபரம், கணியம்சார் நுணுக்கங்கள், நிதியியல் நிறுவனங்கள், அபிவிருத்திப் பொருளாதாரம் மற்றும் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி என்பன காணப்படுகின்றன. அவரின் ஈடுபாட்டிற்குரிய ஆராய்ச்சித் துறைகளாக பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள், வேளாண்மை உள்ளிட்ட வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி, நிதியியல் சந்தை, வறுமை, தொழில், பொதுப்படுகடன், கல்வி மற்றும் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன காணப்பட்டன. முனைவர் துணுசிங்க ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு, *வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி* மீதான *ஐக்கிய நாடுகள் மாநாடு* மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி அமைச்சு, கைத்தொழில்கள் அமைச்சு, தொழில் அமைச்சு மற்றும் வேளாண்மை அமைச்சு என்பனவற்றுக்கான ஆலோசனையாளராக பணியாற்றியிருக்கின்றார். அவர் புகழ்பூத்த பல்வேறு சஞ்சிகைகளிலும் அநேக ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டிருப்பதுடன் ஆராய்ச்சிக்காக அநேக விருதுகளையும் வென்றிருக்கின்றார். இவர் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கான கிரமமாகப் பங்களிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.